பத்திரிக்கை செய்தி

காலி வீட்டு மனையை பதிவு செய்ய ரூ.2,00,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு) தாம்பரம் மற்றும் தனிநபர் கைது

புகார்தாரர் திரு.பிரவின்குமார், நெடுங்குன்றம், சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறார். புகார்தாரர் நெடுங்குன்றத்தில் 2400 சதுர அடி கொண்ட நிலத்தினை பத்திர பதிவு செய்ய தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து பத்திர பதிவு செய்ய திருமதி.ரேவதி, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), தாம்பரம் அவர்கள் தனக்கு ரூ.10,00,000/- லஞ்சமாக தர வேண்டும் என கேட்டுள்ளார். அப்போது புகார்தாரர் பத்திர பதிவு செய்யும்போது ரூ.2,00,000/-ம், மீதி ரூ.8,00,000/- பத்திரம் வாங்கும்போது தருவதாக கூறியுள்ளார். இதன்பின் லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 13.11.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.ரேவதி, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), தாம்பரம் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் திரு.பிரவின்குமார், பத்திர எழுத்தர் (தனிநபர்) அவர்கள் லஞ்ச பணம் ரூ.2,00,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.